| | |
|---|---|
| | **கமு/திகோ/கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயம்** |
| | **மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022** |
| | **கத்தோலிக்க திருமறை** |
| | **சுட்டெண் : ............................** / **புள்ளிகள் :-** |
| **தரம் :- 09** | **நேரம் :- 02.00 மணித்தியாலங்கள்** |

## பகுதி I

**மிகவும் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. "என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே" என்ற கடவுளின் வார்த்தைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வசனம்.
 1. இனிமைமிகு பாடலில் உள்ளது 2. நீதிமொழிகளில் உள்ளது
 3. சீராக் ஞானத்தில் உள்ளது 4. திருப்பாடல்களில் உள்ளது

02. பழைய ஏற்பாட்டு நூல்களின் ஐந்தாவது தொகுதி,
 1. வரலாற்று நூல்கள் 2. ஞானநூல்கள்
 3. ஐந்நூல் 4. வெளிப்பாட்டு இலக்கியம்

03. இயேசுவின் விண்ணேற்புக்குப் பின் திருச்சபை ஆரம்பித்து வளர்ச்சியடைந்த விதம் பற்றிக் கூறும் புதிய ஏற்பாட்டு நூல்,
 1. திருமுகங்கள் 2. திருவெளிப்பாட்டு இலக்கியம்
 3. திருத்தூதர் பணிகள் 4. நற்செய்திகள்

04. **"செபத்தைப்பற்றிய புதையல்" எனக் கருதப்படும் விவிலிய நூல் எது?**
 1. நீதிமொழிகள் 2. இனிமை மிகு பாடல்
 3. திருத்தூதர் பணிகள் 4. திருப்பாடல்

05. பாடுகளின் நற்செய்தி என்று அழைக்கப்படும் ஒத்தமை நற்செய்திகளில் ஒன்று
 1. லூக்கா நற்செய்தி 2. மத்தேயு நற்செய்தி
 3. யோவான் நற்செய்தி 4. மாற்கு நற்செய்தி

06. தூய யோவனின் நற்செய்தி எழுதப்பட்ட காலம்
 1. கி.பி. 90-100 2. கி.பி 64-66 3. கி.பி. 80-90 4. கி.பி. 40-60

07 A - வாழ்நாள் முழுதும் ஊர்ந்து புழுதியை தின்பாய்
 B - வாழ்நாள் எல்லாம் வருந்தி அதன் பயனை உண்ணுதல்.
 C - நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உண்ணுதல்.
 D - வேதனையோடு குழந்தைகளைப் பெறுதல்.
மேற்காட்டப்பட்ட விடயங்களில் இறைவன் ஆதாமுக்குக் கொடுத்த தண்டனைகள்
 1. A உம் B உம் 2. B உம் C உம்
 3. A உம் D உம் 4. C உம் D உம்

08. தன் சகோதரனைக் கொன்ற காயினுக்கு இறைவன் இரக்கம் காட்டினார் என்பதை எடுத்துக்காட்டுவது
 1. காயினைக் கொன்றால் அவனுக்குக் கிடைக்கும் தண்டனை ஏழு மடங்கு அதிகமாகும். என்ற வார்த்தை
 2. நான் உன்னோடு இருப்பேன் என்ற வார்த்தை
 3. உன் வாயில் நான் இருப்பேன் என்ற வார்த்தை
 4. நீ உன்னை அறியாமல் செய்த குற்றம் உன் இரத்தத்தை கொதிக்க வைத்தது என்ற வார்த்தை.

09. தற்கால சமூகத்தில் காணப்படும் பாவச்செயல் அல்லாதது
 1. நேர்மை 2. இலஞ்சம் 3. பழிவாங்குதல் 4. பகை

10. நீதித்தலைவர்கள் வாழ்ந்த காலப்பகுதி
 1. கி.மு. 1100 - கி.மு. 950 2. கி.மு. 1200 - கி.மு. 1050
 3. கி.மு. 1000 - கி.மு. 900 4. கி.மு. 1300 - கி.மு. 1200

11. யூத மக்கள் இறைவனை நோக்கி முறையிட்டபோது அவர்களை மிதியானியரின் கையிலிருந்து மீட்க தெரிந்தெடுத்த நீதித்தலைவர்
    1. தெபோரா    2. சிம்சோன்    3. கிதியோன்    4. இப்சான்

12. சவுலையும் தாவீதையும் அரசர்களாக திருப்பொழிவு செய்தவர்
    1. சாமுவேல்    2. எசாயா    3. எரேமியா    4. எசேக்கியல்

13. இறைவாக்கினர் நாத்தான் தாவீது அரசனின் தவறைச் சுட்டிக் காட்ட பயன்படுத்தியது
    1. புதுமை    2. உரையாடல்    3. படக்காட்சி    4. உவமை

14. "கடவுள் மீது நம்பிக்கை கொள்வோர் சீயோன் மலைபோல் நிலைத்திருப்பர்" என்பதில் சீயோன் குறிப்பது
    1. நாசரேத்    2. கலிலேயா    3. எருசலேம்    4. பலஸ்தீனா

15. "மனம்மாறிய ஒரு பாவியைக் குறித்துக் கடவுளின் தூதரிடையே மகிழ்ச்சி உண்டாகும் என உங்களுக்குச் சொல்கிறேன்" என்று இயேசு கூறியது.
    1. காணாமல்போன மகன் என்ற உவமையைக் கூறிய பின்பு
    2. பாவிப்பெண் மனம் மாறிய பின்பு
    3. காணாமல் போன ஆடு என்ற உவமையைக் கூறிய பின்பு
    4. காணாமல் போன திராக்மா என்ற உவமையை கூறிய பின்பு

16. கி.பி. 354 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 13ஆம் திகதி வட ஆபிரிக்காவில் தாகாஸ்தே நகரில் பிறந்த புனிதர்
    1. தூய அகுஸ்தின்    2. தூய பிரான்சிஸ் அசிசி
    3. தூய அந்தோனியார்    4. தூய செபஸ்தியார்

17. இஸ்ரயேலின் முதல் அரசன்
    1. சாலமோன்    2. சவுல்    3. தாவீது    4. ரெகபெயாம்

18. பொறாமை தலையான பாவமாகக் கருதப்படுவதற்கான காரணம்
    1. அது மற்றவர்களுடைய வாழ்வை நாசப்படுத்துகின்றது.
    2. அது எம்மைப் பாரிய பாவத்துக்கு இட்டுச் செல்வதனாலாகும்.
    3. அதனால் உயிரையே அழித்துவிடுவதனாலாகும்.
    4. அன்புக்கு எதிர்மறையாக இருப்பதனாலேயாகும்.

19. "கருக்கலைப்பு சிறுவர் கொலையாகும்; கொடூரமான செயலாகும்" என எடுத்துக்காட்டுவது
    1. கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி நூல்    2. திருவிவிலியம்
    3. பெரிய குறிப்பிடம்    4. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு

20. கார்மேல் மலையில் எலியா செய்த எரிபலி முடிவுக்கு வந்தபோது வரட்சி நீங்கி மழை பெய்த சம்பவத்தின் மூலம் எமக்குக் கிடைக்கும் படிப்பினை அல்லாதது
    1. இறைவனில் நம்பிக்கை வைப்போரை அவர் பாதுகாப்பார்.
    2. எம் தேவைகளின் போது இறைவன் உதவுவார்.
    3. நாம் சவால்களின் மத்தியிலும் இறைவனிடம் மன்றாட வேண்டும்.
    4. அவநம்பிக்கையினாலும் உலகை வெல்லலாம்.

(20x1=20 புள்ளிகள்)

**தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1) சாலமோன் | வெள்ளப்பெருக்கிலிருந்து காப்பாற்றப்பட்டார் |
| 2) நாத்தான் | தாவீதை நல்வழிப்படுத்தியவர் |
| 3) யோனத்தான் | மிதியானிடமிருந்து இஸ்ரயேலரை மீட்டார். |
| 4) ஈசாயி | பெஞ்சமின் கோத்திரம் |
| 5) பவுல் | படைத்தலைவன் பாராக்கை ஊக்கப்படுத்தினார் |
| 1) நோவா | நீதித்தலைவர்களை எழச் செய்தார் |
| 2) சாமுவேல் | தாவீதின் தந்தை |
| 3) ஆண்டவர் | எருசலேம் தேவாலயம் |
| 4) தெபோரா | சவுல் அரசனின் மகன் |
| 5) கிதியோன் | கடைசி நீதித்தலைவர் |

(10x1=10 புள்ளிகள்)

**சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (×) எனவும்அடையாளம் இடுக.**

1) **"ஆசிப்பா" அணுகுமுறையை** அன்பியம் என்றும் அழைக்கலாம். (   )
2) தூய யோசேப்வாஸ் அடிகள் சிறைக்கைதியாக கண்டியிலிருந்த போது ஆட்சி செய்த அரசன் ஆறாம் புவனேக பகு ஆவார் (   )
3) ஆழ்நிலைத் தியானத்தில் முதற்படி வாய்மொழி இறை வேண்டல் ஆகும் (   )
4) சாலமோன் அரசனுக்கு இறைவன் கனவில் தோன்றிய இடம் சீனாய் மலை ஆகும் (   )
5) குழந்தை இயேசுவை காணிக்கையாக ஒப்புக்கொடுத்த ஆலயம் எருசலேம் தேவாலயம் ஆகும் (   )

(10x1=10 புள்ளிகள்)

**உரிய சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.**

**( திருமுழுக்கு யோவான் / ஐந்தாவது / தூய அக்னெஸ் / ஏழு / நீதிமொழி )**

1) "எனது மீட்பராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கு மாத்திரமே நான் சொந்தமானவள்" எனக் கூறிய புனிதை ...................................................
2) ஏரோது அந்திபாஸ் ஒன்பதாம் கட்டளைக்கு எதிராக செய்த பாவத்தை ........................ சுட்டிக்காட்டினார்
3) கற்பு நெறி தவறுபவன் மதிகேடன். அவ்வாறு செய்வோன் தன்னையே அழித்துக் கொள்வான் எனக் கூறும் நூல் .............................................. ஆகும்
4) கருக்கலைப்பு .................................. கட்டளைக்கு எதிரான செயலாகும்
5) ஜெருசலேம் தேவாலயத்தைக் கட்டுவதற்கு .................. வருடங்கள் எடுத்தன

(5x2=10 புள்ளிகள்)

## பகுதி II
### முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

**01.**
1) செபம் என்றால் என்ன?
2) சாலமோன் அரசன் இறைவனிடம் விருப்புடன் கேட்ட சிறந்த வரம் எது?
3) தூய யோசேப்வாஸ் அடிகளார் செய்த புதுமைகள் இரண்டைக் குறிப்பிடுக.
4) மதுபோதைப் பாவனை ஏற்படுத்தும் தீமைகள் இரண்டைக் குறிப்பிடுக
5) புகுமுக அருளடையாளங்கள் இரண்டைக் எழுதுக.

(5x2=10 புள்ளிகள்)

**02.**
1) தூய லூக்கா நற்செய்தியின் அடையாளம் எருதாகக் கொள்ளப்பட்டதற்கான காரணம் என்ன?
2) ஒத்தமை நற்செய்திகள் எவை?
3) புனித லூக்கா நற்செய்திக்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள்?

(2+3+5=10 புள்ளிகள்)

**03.**
1) பாவம் என்றால் என்ன?
2) பாம்பின் தந்திரமான பேச்சை நம்பிய ஏவாள் அந்த பழத்தை பறித்து உண்டதற்கான காரணங்கள் மூன்றைக் குறிப்பிடுக.
3) காயின் ஆபேல் கதை மூலம் இறைவன் எமக்கு கற்பிக்கப்படும் செய்திகள் ஐந்தைக் குறிப்பிடுக?

(2+3+5=10 புள்ளிகள்)

**04.**
1) இறைவனின் கேள்விக்கு ஆதாம் அளித்த பதில் யாது?
2) பாவத்தில் விழுந்த ஏவாளுக்கு இறைவன் கொடுத்த தண்டனை என்ன?
3) இன்றைய சமூகத்தில் பாவச் செயல்களை ஒழிப்பதற்கு பாடசாலை மாணவராகிய நீர் செய்யக் கூடிய செயல்கள் ஐந்தைக் குறிப்பிடுக.

(2+3+5=10 புள்ளிகள்)

**05.**
1) பழைய ஏற்பாட்டிலுள்ள நூல்களின் எண்ணிக்கையையும் புதிய ஏற்பாட்டிலுள்ள நூல்களின் எண்ணிக்கையையும எழுதுக?
2) புதிய ஏற்பாட்டிலுள்ள நூல்களின் மூன்று பிரிவுகளையும் குறிப்பிடுக.
3) பழைய ஏற்பாட்டு நூல்களை வகைப்படுத்துக?

(2+3+5=10 புள்ளிகள்)

**06.**
1) தற்கொலை எத்தனையாம் கட்டளைக்கு எதிரான செயலாகும்?
2) ‘தற்கொலை செய்வது பாவமாகும்.’ காரணம் தருக.
3) வாழ்வு இறைவன் எமக்குத்தந்த கொடையாகும் என்பதை மனதிற்கொண்டு உடல் மட்டில் எமக்குள்ள கடமைகள் எவை?

(2+3+5=10 புள்ளிகள்)

**07.** பின்வருவனவற்றுள் இரண்டைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
1. குணமளிக்கும் அருயடையாளங்கள்
2. உயிர்களைப் பாதுகாத்தல்
3. மனிதன் பாவத்தில் விழுதல்
4. தூய மரிய கொறற்றி

(5+5=10 புள்ளிகள்)